10. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்.	10. கொல்லாதவனையும் புலால் உண்ணாதவனையும் கைகூப்பி எல்லா உயிர்களும் வணங்கும்.

16 வினா எண் 29

அமைப்புகளை அவை தொடங்கப்பட்ட ஆண்டுகளுடன் பொருத்துக. (a) மெட்ராஸ் இந்து கைம்பெண்கள் மறுமணச் சங்கம் (b) மெட்ராஸ் மஹாஜன சபா (c) மெட்ராஸ் இலக்கியச் சங்கம் (d) இந்து முற்போக்கு வளர்ச்சிக் கழகம்; 1. 1852 2. 1817 3. 1891 4. 1884

(A) (a)–2, (b)–3, (c)–1, (d)–4
(B) (a)–3, (b)–1, (c)–4, (d)–2
(C) (a)–3, (b)–4, (c)–2, (d)–1
(D) (a)–1, (b)–2, (c)–3, (d)–4

Match the Organisation with its Founding year: (a) Madras Hindu Widow Remarriage Association (b) Madras Mahajana Sabha (c) Madras Literary Society (d) Hindu Progressive Improvement Society; 1. 1852 2. 1817 3. 1891 4. 1884

(A) (a)-2, (b)-3, (c)-1, (d)-4
(B) (a)-3, (b)-1, (c)-4, (d)-2
(C) (a)-3, (b)-4, (c)-2, (d)-1
(D) (a)-1, (b)-2, (c)-3, (d)-4

பாடநூல் மூலம்

▶ 10TH SOCIAL SCIENCE – HISTORY – UNIT 9 – PG NUM: 114

மூல வினாத்தாள்

29. Match the Organisation with its Founding year :

(a)	Madras Hindu Widow Remarriage Association	1. 1852
(b)	Madras Mahajana Sabha	2. 1817
(c)	Madras Literary Society	3. 1891
(d)	Hindu Progressive Improvement Society	4. 1884

	(a)	(b)	(c)	(d)
(A)	2	3	1	4
(B)	3	1	4	2
(C)	3	4	2	1
(D)	1	2	3	4

(E) Answer not known

அமைப்புகளை அவை தொடங்கப்பட்ட ஆண்டுகளுடன் பொருத்துக.

(a)	மெட்ராஸ் இந்து கைம்பெண்கள் மறுமணச் சங்கம்	1. 1852
(b)	மெட்ராஸ் மஹாஜன சபா	2. 1817
(c)	மெட்ராஸ் இலக்கியச் சங்கம்	3. 1891
(d)	இந்து முற்போக்கு வளர்ச்சிக் கழகம்	4. 1884

	(a)	(b)	(c)	(d)
(A)	2	3	1	4
(B)	3	1	4	2
(C)	3	4	2	1
(D)	1	2	3	4

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

(இ) சென்னை மகாஜன சபை

தென்னிந்தியாவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் தொடங்கப்பெற்ற தொடக்ககால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும். 1884 மே 16இல் M. வீரராகவாச்சாரி, P. அனந்தாச்சார்லு, P. ரங்கையா மற்றும் சிலரால் நிறுவப்பட்ட இவ்வமைப்பின் முதல் தலைவராக P. ரங்கையா பொறுப்பேற்றார். இதனுடைய செயலாளராக பொறுப்பேற்ற P. அனந்தாச்சார்லு இதன் செயல்பாடுகளில் பங்காற்றினார். அமைப்பின் உறுப்பினர்கள் குறிப்பிட்ட இடைவெளிகளில் ஒன்று கூடி தனிப்பட்ட விதத்திலும் அறைக்கூட்டங்கள் நடத்தியும் பொதுப்பிரச்சனைகள் குறித்து விவாதித்து தங்கள் கருத்துகளை அரசுக்குத் தெரியப்படுத்தினர். குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் நடத்தப்பட வேண்டும். லண்டனிலுள்ள இந்தியக் கவுன்சிலை மூடுவது, வரிகளைக் குறைப்பது, இராணுவ குடியியல் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்கைகளாகும். இவ்வமைப்பின் பல கோரிக்கைகள் பின்னர் 1885இல் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய காங்கிரசின் கோரிக்கைகளாயின.

17 வினா எண் 30

கோவில் நுழைவுப் போராட்டத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது சரியானது? (i) 1920களில் இந்தியாவில் தோன்றிய ஒரு சமூக சீர்திருத்த இயக்கமே கோவில் நுழைவு போராட்டம். (ii) கீழ்நிலை மக்களுக்கு கோவிலினுள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டம். (iii) 1924–ல் வைக்கம் என்ற இடத்தில் நடத்தப்பட்ட சத்தியாகிரகப் போராட்டமே இதற்கு தொடக்கமாக அமைந்தது. (iv) 1924 வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தை காந்தியடிகள் தலைமையேற்று நடத்தினார்.

(A) (i) மட்டும் சரியானது
(B) (i) மற்றும் (ii) மட்டும் சரியானது
(C) (i), (ii) மற்றும் (iii) சரியானது
(D) மேற்கூறிய அனைத்தும் சரியானது

Which of the following statements are true about Temple Entry Movement? (i) Temple Entry Movement in India initiated in 1920s, was a social reform movement. (ii) It aimed to challenge the discriminatory practice of denying temple entry to lower caste members. (iii) It saw its first major struggle in the Vaikom Satyagraha in 1924. (iv) Gandhi led the 1924 Vaikom Satyagraha.

(A) (i) is true
(B) (i) and (ii) are true
(C) (i), (ii) and (iii) are true
(D) All the above are true

பாடநூல் மூலம்

▶ 10TH HISTORY – UNIT 10 – PG NUM: 128

மூல வினாத்தாள்

30. Which of the following statements are true about Temple Entry Movement?
(i) Temple Entry Movement in India initiated in 1920s, was a social reform movement.
(ii) It aimed to challenge the discriminatory practice of denying temple entry to lower caste members.
(iii) It saw its first major struggle in the Vaikom Satyagraha in 1924.
(iv) Gandhi led the 1924 Vaikom Satyagraha.
(A) (i) is true
(B) (i) and (ii) are true
(C) (i), (ii) and (iii) are true
(D) All the above are true
(E) Answer not known

கோவில் நுழைவுப் போராட்டத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் எது சரியானது?
(i) 1920களில் இந்தியாவில் தோன்றிய ஒரு சமூக சீர்திருத்த இயக்கமே கோவில் நுழைவு போராட்டம்.
(ii) கீழ்நிலை மக்களுக்கு கோவிலினுள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டம்.
(iii) 1924-ல் வைக்கம் என்ற இடத்தில் நடத்தப்பட்ட சத்தியாகிரகப் போராட்டமே இதற்கு தொடக்கமாக அமைந்தது.
(iv) : 1924 வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தை காந்தியடிகள் தலைமையேற்று நடத்தினார்.
(A) (i) மட்டும் சரியானது
(B) (i) மற்றும் (ii) மட்டும் சரியானது
(C) (i), (ii) மற்றும் (iii) சரியானது
(D) மேற்கூறிய அனைத்தும் சரியானது
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நடைமுறையினை வைக்கம் (திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு சுதேசி அரசு, தற்போதைய கேரள மாநிலத்திலுள்ள ஒரு நகரம்) மக்கள் எதிர்த்தனர். எதிர்ப்பின் தொடக்கக் கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் பெரும்பங்கு வகித்தார். உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பெரியார் இந்த இயக்கத்திற்கு தலைமையேற்றதால் சிறையிலடைக்கப்பட்டார். மக்கள் அவரை 'வைக்கம் வீரர்' எனப் பாராட்டினர்.

18 வினா எண் 31

பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க. (i) மன்னர்க்கு உறுபொருள், உல்கு பொருள், ஒன்னார்த் தெறுபொருள் என மூவகை வருவாய் உள்ளன என்று திருக்குறள் கூறுகிறது. (ii) உறுபொருள் என்பது பகைவரிடமிருந்து பெற்ற திறைப்பொருள். (iii) உல்கு பொருள் என்பது சுங்க வரியால் வரும் பொருள்.

(A) (i) மட்டும் சரி
(B) (ii) மட்டும் சரி
(C) (i) மற்றும் (iii) மட்டும் சரி
(D) (i) மற்றும் (ii) மட்டும் சரி

Choose the right answer / answers: (i) Thirukkural says: Unclaimed wealth, wealth acquired by taxes and wealth got by conquest of foes are the wealth of king. (ii) The unclaimed wealth means the wealth by conquest of foes. (iii) The wealth acquired by taxes is called as ulgu porul.

(A) (i) only correct
(B) (ii) only correct
(C) (i) and (iii) only correct
(D) (i) and (ii) only correct

பாடநூல் மூலம்

▶ 10TH TAMIL – BOOK BACK – PG NUM: 169

மூல வினாத்தாள்

31. Choose the right answer / answers :
(i) Thirukkural says :
Unclaimed wealth, wealth acquired by taxes and wealth got by conquest of foes are the wealth of king.
(ii) The unclaimed wealth means the wealth by conquest of foes.
(iii) The wealth acquired by taxes is called as ulgu porul.
(A) (i) only correct
(B) (ii) only correct
(C) (i) and (iii) only correct
(D) (i) and (ii) only correct
(E) Answer not known

பின்வருவனவற்றுள் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.
(i) மன்னர்க்கு உறுபொருள், உல்கு பொருள், ஒன்னார்த் தெறுபொருள் என மூவகை வருவாய் உள்ளன என்று திருக்குறள் கூறுகிறது.
(ii) உறுபொருள் என்பது பகைவரிடமிருந்து பெற்ற திறைப்பொருள்.
(iii) உல்கு பொருள் என்பது சுங்க வரியால் வரும் பொருள்.
(A) (i) மட்டும் சரி
(B) (ii) மட்டும் சரி
(C) (i) மற்றும் (iii) மட்டும் சரி
(D) (i) மற்றும் (ii) மட்டும் சரி
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

6. உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த் தெறுபொருளும் வேந்தன் பொருள்.

6. வரியும் சுங்கமும் பகைவரின் திறையும் அரசனுக்கு வருவாய்ப் பொருளாம்.

19 வினா எண் 32

கீழ்கண்டவற்றில் பேரறிஞர் அண்ணா பற்றிய தவறான கூற்று எது? (a) இவர் சுயமரியாதை திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கினார். (b) இவருடைய பொருளாதார கொள்கைக்கு "விஞ்ஞான சோஷியலிசம்" எனப் பெயரிட்டார். (c) இவர் சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய "வீராணம் குடிநீர்" திட்டத்தைக் கொண்டுவந்தார். (d) இவருக்கு "பேரறிஞர்" என்ற பட்டத்தைத் தந்தை பெரியார் அவர்கள் வழங்கினார்.

(A) (a) (B) (b)
(C) (c) (D) (d)

Which one of the following statement is not correct about Perarignar Anna? (a) He enacted law for approving self respect marriages. (b) He named his economic policy as "Scientific Socialism". (c) He initiated "Veeranam Drinking Water Project" for fulfilling the drinking water need to the people of Chennai. (d) He was conferred the title "Perarignar" by Thanthai Periyar.

(A) (a) (B) (b)
(C) (c) (D) (d)

பாடநூல் மூலம்

▶ 12TH STANDARD – POLITICAL SCIENCE – UNIT 1 – PG NUM: 11

மூல வினாத்தாள்

32. Which one of the following statement is not correct about Perarignar Anna?

(a) He enacted law for approving self respect marriages.

(b) He named his economic policy as "Scientific Socialism"

(c) He initiated "Veeranam Drinking Water Project" for fulfilling the drinking water need to the people of Chennai.

(d) He was conferred the title "Perarignar" by Thanthai Periyar.

(A) (a) (B) (b)
(C) (c) (D) (d)
(E) Answer not known

கீழ்கண்டவற்றில் பேரறிஞர் அண்ணா பற்றிய தவறான கூற்று எது?

(a) இவர் சுயமரியாதை திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கினார்.

(b) இவருடைய பொருளாதார கொள்கைக்கு "விஞ்ஞான சோஷியலிசம்" எனப் பெயரிட்டார்.

(c) இவர் சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்ய "வீராணம் குடிநீர்" திட்டத்தைக் கொண்டுவந்தார்.

(d) இவருக்கு "பேரறிஞர்" என்ற பட்டத்தைப் தந்தை பெரியார் அவர்கள் வழங்கினார்.

(A) (a) (B) (b)
(C) (c) (D) (d)
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

1967இல் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சிக்கு வந்தது. சி.என்.அண்ணாதுரை முதல்வராக பதவி ஏற்றார். அவரது ஆட்சியில் இந்து திருமணச் சட்டம் திருத்தப்பட்டு 'சுயமரியாதை திருமணங்கள்' அதாவது மத சடங்குகள் இல்லாமல் மேற்கொள்ளப்படும் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டன. அவருக்கு அடுத்து பதவி ஏற்று, ஐந்து தடவைகள் முதல் அமைச்சராக பதவி வகித்த மு.கருணாநிதி பல சட்டங்களையும் எண்ணற்ற தீர்மானங்களையும் கொண்டு வந்துள்ளார். அவர் கொண்டு வந்த கடைசி சட்டமுன்வரைவு பிற்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீட்டுக்குள் முஸ்லீம்களுக்கும் சிறப்பு உள் ஒதுக்கீடு வழங்குவதுடன் பட்டியல் இனங்களுக்கும் மற்றும் பழங்குடியினருக்குமான ஒதுக்கீட்டின் கீழ் அருந்தியர்களுக்கு உள்ஒதுக்கீடு வழங்குகிறது.

20 வினா எண் 33

பின்வருவனவற்றுள் கசலு லட்சுமணராசு தொடர்புடைய சரியான கூற்று எது? (i) இவர் சென்னை வாசிகள் சங்கத்தை நிறுவினார். (ii) இவர் 'நேட்டிவ் இன்டர்பிரட்டர்' என்ற பத்திரிகையை விலைக்கு வாங்கினார். (iii) இவர் இந்து முன்னேற்ற மேம்பாட்டுச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார். (iv) இவர் வித்யானுபவானயந்திர சாலை என்ற அச்சுக்கூடத்தை நிறுவினார்.

(A) (i) மற்றும் (ii)
(B) (ii) மற்றும் (iii)
(C) (i) மற்றும் (iii)
(D) (ii), (iii) மற்றும் (iv)

Which among the following statement(s) are true about Gazalu Lakshmanarasu? (i) He founded the Madras Native Association. (ii) He purchased the News Paper called 'Native Interpreter'. (iii) He formed the Hindu progressive improvement society. (iv) He established Vidyanubavanayandira salai printing press.

(A) (i) and (ii)
(B) (ii) and (iii)
(C) (i) and (iii)
(D) (ii), (iii) and (iv)

பாடநூல் மூலம்

▶ 10TH SOCIAL SCIENCE – HISTORY – UNIT 9 – PG NUM: 113

மூல வினாத்தாள்

33. Which among the following statement(s) are true about Gazalu Lakshmanarasu?

(i) He founded the Madras Native Association.

(ii) He purchased the News Paper called 'Native Interpreter'.

(iii) He formed the Hindu progressive improvement society.

(iv) He established Vidyanubavanayandira salai printing press.

(A) (i) and (ii) (B) (ii) and (iii)

(C) (i) and (iii) (D) (ii), (iii) and (iv)

(E) Answer not known

பின்வருவனவற்றுள் கசலு லட்சுமணராசு தொடர்புடைய சரியான கூற்று எது?

(i) இவர் சென்னை வாசிகள் சங்கத்தை நிறுவினார்.

(ii) இவர் 'நேட்டிவ் இன்டர்பிரட்டர்' என்ற பத்திரிகையை விலைக்கு வாங்கினார்.

(iii) இவர் இந்து முன்னேற்ற மேம்பாட்டுச் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கினார்.

(iv) இவர் வித்யானுபவானயந்திர சாலை என்ற அச்சுக்கூடத்தை நிறுவினார்.

(A) (i) மற்றும் (ii) (B) (ii) மற்றும் (iii)

(C) (i) மற்றும் (iii) (D) (ii), (iii) மற்றும் (iv)

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

(அ) சென்னைவாசிகள் சங்கம்

சென்னைவாசிகள் சங்கம் (Madras Native Association–MNA), தென்னிந்தியாவில், தொடங்கப்பெற்ற காலத்தால் முற்பட்ட அமைப்பான இவ்வமைப்பு தனிப்பட்ட குழுக்களின் விருப்பங்களைக் காட்டிலும் பொதுமக்களின் தேவைகளை அனைவருக்கும் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவானது. இவ்வமைப்பு 1852இல் கஜுலு லட்சுமிநரசு, சீனிவாசனார் மற்றும் அவர்களைச் சேர்ந்தோர்களாலும் நிறுவப் பெற்றது. இவ்வமைப்பில் வணிகர்களே அதிக எண்ணிக்கையில் அங்கம் வகித்தனர். தனது உறுப்பினர்களின் நலன்களை முன்னெடுப்பது, வரிகளைக் குறைக்க கோரிக்கை வைப்பது போன்ற நோக்கங்களை இவ்வமைப்பு உள்ளடக்கி இருந்தது. மேலும், கிறித்தவ சமயப்பரப்பாளர்களின் செயல்பாடுகளுக்கு அரசு ஆதரவளித்ததை எதிர்த்தனர். மக்களின் நிலை அவர்களின் தேவைகள் ஆகியவற்றின் மீது அரசின் கவனத்தைத் திருப்பும் பணியை இவ்வமைப்பு



கஜுலு லட்சுமிநரசு

21 வினா எண் 35

கூற்று [A]: திராவிடர் என்ற சொல்லை இடைக்காலத்தில் பயன்படுத்தியவர் கால்டுவெல். காரணம் [R]: "திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பங்கள்" என்ற நூலை இயற்றியுள்ளார்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி
(C) [A] தவறு ஆனால் [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் தவறு

Assertion [A]: The term Dravidian was first used in the middle ages by Caldwell. Reason [R]: He has written a book titled "A comparative grammar of the Dravidian or South-Indian family of languages"

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true
(C) [A] is false but [R] is true
(D) Both [A] and [R] are false

பாடநூல் மூலம்

▶ 9TH TAMIL – UNIT 1 – PG NUM: 5
▶ 11TH STANDARD – POLITICAL SCIENCE – UNIT 14 – PG NUM: 279

மூல வினாத்தாள்

35. Assertion [A] : The term Dravidian was first used in the middle ages by Caldwell.

Reason [R] : He has written a book titled "A comparative grammar of the Dravidian or South-Indian family of languages"

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true
(C) [A] is false but [R] is true
(D) Both [A] and [R] are false
(E) Answer not known


கூற்று [A] : திராவிடர் என்ற சொல்லை இடைக்காலத்தில் பயன்படுத்தியவர் கால்டுவெல்.

காரணம் [R] : "திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பங்கள்" என்ற நூலை இயற்றியுள்ளார்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி
(C) [A] தவறு ஆனால் [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

1856இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்; இதனை மேலும் உறுதிப்படுத்தப் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி, திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளையும் எடுத்துரைத்தார்.



இராபர்ட் கால்டுவெல் (1814-1891) கிறிஸ்தவ மதபோதகரான இவர், 1838 இல் சமயப் பணிக்காக திருநெல்வேலி (இடையான்குடி) பகுதியை வந்தடைந்தார். ராபர்ட் சமயப்பணியுடன் கல்விப் கால்டுவெல் பணி மற்றும் மொழி ஆராய்ச்சியையும் மேற்கொண்டார். அவரது புகழ்பெற்ற ஆய்வு நூலான "திராவிட அல்லது தென்னிந்திய குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்" 1856 இல் வெளியிடப்பட்டது. அதன் வாயிலாக தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய தென்னிந்திய மொழிகள் சமஸ்கிருத மொழி குடும்பத்தைச் சேராதவை, திராவிட மொழிக் குடும்பம் என்று வகைப்படுத்தக் கூடியவை என்பதை தகுந்த சான்றுகளுடன் நிறுவினார். அவற்றில் தமிழ் மிகத் தொன்மையானது என்றும், மிகத் தொன்மையான கிறிஸ்துவ மறைநூற்களில் கூட தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டினார். 1816இல் எல்லிஸ் அவர்களால் முன்மொழியப்பட்ட" திராவிட மொழிக் குடும்பம் " என்கிற கருத்தியலை 1856இல் ஒப்பிலக்கணம் மூலம் உறுதிப்படுத்தியவர் கால்டுவெல் ஆவார்.அவரது மனைவியார் எலிஸா மால்ட் அவர்களும் இப்பகுதியில் மகளிர் கல்விக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளார். கால்டுவெல் அவர்களின் ஆய்வுகள் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளின் தனித்துவத்தையும் தொன்மையையும் எடுத்துரைக்கும் விதமாக அமைந்தன.

22 வினா எண் 36

விளக்கம் [A]: பொய்யாமையைக் காட்டிலும் கொல்லாமை சிறந்த அறமாகும். காரணம் [R]: பிற உயிரைக் கொல்வது பொய்யாமையைக் காட்டிலும் கொடுமையானது.

(A) [A] மற்றும் [R] சரியானவை, மற்றும் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமாகும்

(B) [A] சரி, [R] தவறு

(C) [A] மற்றும் [R] சரியானவை, மற்றும் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமல்ல

(D) [A] தவறு, [R] சரி

Assertion [A]: Not to kill the animals in incomparable virtue than not to speak untrue words. Reason [R]: It is highly dangerous one to kill the animals than not to speak untrue words.

(A) [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(B) [A] is true, [R] is false

(C) [A] and [R] are true, and [R] is not the correct explanation of [A]

(D) [A] is false, [R] is true

பாடநூல் மூலம்

▶ 6TH TAMIL – TERM 3 – BOOK BACK – PG NUM: 63

மூல வினாத்தாள்

36. Assertion [A] : Not to kill the animals in incomparable virtue than not to speak untrue words.

Reason [R] : It is highly dangerous one to kill the animals than not to speak untrue words.

(A) [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(B) [A] is true, [R] is false

(C) [A] and [R] are true, and [R] is not the correct explanation of [A]

(D) [A] is false, [R] is true

(E) Answer not known

விளக்கம் [A] : பொய்யாமையைக் காட்டிலும் கொல்லாமை சிறந்த அறமாகும்.

காரணம் [R] : பிற உயிரைக் கொல்வது பொய்யாமையைக் காட்டிலும் கொடுமையானது.

(A) [A] மற்றும் [R] சரியானவை, மற்றும் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமாகும்.

(B) [A] சரி, [R] தவறு

(C) [A] மற்றும் [R] சரியானவை, மற்றும் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமல்ல

(D) [A] தவறு, [R] சரி

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

3. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றுஅதன் பின்சாரப் பொய்யாமை நன்று.	3. நிகரற்ற அறம் கொல்லாமை; அதற்குத் துணையாகும் வாய்மையும் நல்ல அறம்.

23 வினா எண் 52

பின்வருவனவற்றை பொருத்துக. (a) கருப்பு கார்பன் (b) சாம்பல் கார்பன் (c) பழுப்பு கார்பன் (d) சிவப்பு கார்பன் | 1. பனி மற்றும் உறை நீரில் இருந்து உயிரிய துகள்களால் வெளியேற்றப்படும் கார்பன் 2. கரிம பொருட்களின் நிறைவுறா எரிதலினால் வெளியேற்றப்படும் கார்பன் 3. தொழிற்சாலை உமிழ்வின் மூலம் வெளியேற்றப்படும் கார்பன் 4. படிம எரிபொருள் மூலம் வெளியேற்றப்படும் கார்பன்

(A) (a) 4, (b) 3, (c) 2, (d) 1
(B) (a) 3, (b) 4, (c) 1, (d) 2
(C) (a) 3, (b) 1, (c) 4, (d) 2
(D) (a) 1, (b) 2, (c) 3, (d) 4

Match the following. (a) Black carbon (b) Grey carbon (c) Brown carbon (d) Red carbon | 1. Carbon released through biological particles on snow and ice 2. Carbon released by incomplete combustion of organic matter 3. Carbon released through industrial emissions 4. Carbon released through fossil fuels

(A) (a) 4, (b) 3, (c) 2, (d) 1
(B) (a) 3, (b) 4, (c) 1, (d) 2
(C) (a) 3, (b) 1, (c) 4, (d) 2
(D) (a) 1, (b) 2, (c) 3, (d) 4

பாடநூல் மூலம்

▶ 12TH BOTANY – UNIT 7 – PG NUM: 163

மூல வினாத்தாள்

52. Match the following.

(a) Black carbon
(b) Grey carbon
(c) Brown carbon
(d) Red carbon

1. Carbon released through biological particles on snow and ice
2. Carbon released by incomplete combustion of organic matter
3. Carbon released through industrial emissions
4. Carbon released through fossil fuels

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	3	4	1	2
(C)	3	1	4	2
(D)	1	2	3	4

(E) Answer not known

பின்வருவனவற்றை பொருத்துக.

(a) கருப்பு கார்பன்
(b) சாம்பல் கார்பன்
(c) பழுப்பு கார்பன்
(d) சிவப்பு கார்பன்

1. பனி மற்றும் உறை நீரில் இருந்து உயிரிய துகள்களால் வெளியேற்றப்படும் கார்பன்
2. கரிம பொருட்களின் நிறைவுறா எரிதலினால் வெளியேற்றப்படும் கார்பன்
3. தொழிற்சாலை உமிழ்வின் மூலம் வெளியேற்றப்படும் கார்பன்
4. படிம எரிபொருள் மூலம் வெளியேற்றப்படும் கார்பன்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	3	4	1	2
(C)	3	1	4	2
(D)	1	2	3	4

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



24 வினா எண் 53

பின்வருவனவற்றைப் பொருத்துக. (a) காக்ஸாக்கி வைரஸ் (b) பார்வோவைரஸ் B19 (c) ரூபெல்லா வைரஸ் (d) வாரிசெல்லா–சோஸ்டர் வைரஸ் | 1. சின்னம்மை 2. ஜெர்மன் தட்டம்மை 3. எரித்மா இன்ஃபெக்டியோசம் 4. கை–கால் மற்றும் வாய் நோய்

(A) (a) 4, (b) 3, (c) 2, (d) 1
(B) (a) 3, (b) 2, (c) 1, (d) 4
(C) (a) 2, (b) 1, (c) 4, (d) 3
(D) (a) 1, (b) 4, (c) 3, (d) 2

Match the following. (a) Coxsackie virus (b) Parvovirus B19 (c) Rubella virus (d) Varicella-zoster virus | 1. Chicken pox 2. German Measles 3. Erythema infectiosum 4. Hand, foot and mouth disease

(A) (a) 4, (b) 3, (c) 2, (d) 1
(B) (a) 3, (b) 2, (c) 1, (d) 4
(C) (a) 2, (b) 1, (c) 4, (d) 3
(D) (a) 1, (b) 4, (c) 3, (d) 2

பாடநூல் மூலம்

▶ 9TH SCIENCE – UNIT 22 – PG NUM: 271

மூல வினாத்தாள்

53. Match the following.

(a) Coxsackie virus
(b) Parvovirus B19
(c) Rubella virus
(d) Varicella-zoster virus

1. Chicken pox
2. German Measles
3. Erythema infectiosum
4. Hand, foot and mouth disease

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	3	2	1	4
(C)	2	1	4	3
(D)	1	4	3	2
(E)	Answer not known			

பின்வருவனவற்றைப் பொருத்துக.

(a) காக்ஸ்சாக்கி வைரஸ்
(b) பார்வோவைரஸ் B19
(c) ருபெல்லா வைரஸ்
(d) வாரிசெல்லா–சோஸ்டர் வைரஸ்

1. சின்னம்மை
2. ஜெர்மன் தட்டம்மை
3. எரித்மா இன்ஃபெக்டியோசம்
4. கை–கால் மற்றும் வாய் நோய்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	3	2	1	4
(C)	2	1	4	3
(D)	1	4	3	2
(E)	விடை தெரியவில்லை			

பாடநூல் பக்கம்

அட்டவணை 22.3 வைரஸால் ஏற்படுத்தப்படும் காற்றுவழி நோய்கள்

நோய்	நோய்க் காரணி	நோய்த்தொற்று முறை	பாதிக்கப்பட்ட திசு/உறுப்பு	அறிகுறிகள்
சாதாரண சளி	ரைனோ வைரஸ்	நோய்தொற்றுத் துளிகள்	மேல் சுவாசக்குழாய் பகுதி (நாசி அறைகளில் வீக்கம்)	காய்ச்சல், இருமல், மூக்கிலிருந்து ஒழுகுதல், தும்மல் மற்றும் தலைவலி
இன்ஃப்ளுயன்சா	மிக்சோ வைரஸ்	நோய்த் தொற்றுத் துளிகள்	சுவாசக்குழாய் (தொண்டை மற்றும் நாசிப்பகுதியில் வீக்கம்)	காய்ச்சல், உடல்வலி, இருமல், தொண்டைவலி, நாசியிலிருந்து வெளியேற்றம், மூச்சு திணறல்
தட்டம்மை	ருபெல்லா வைரஸ்	நோய்த்தொற்றுத் துளிகள் நோய்த்தொற்று கருக்கள் மற்றும் நோய்த்தொற்று ஏற்பட்டவருடனான நேரடித்தொடர்பு	சுவாசக்குழாய்	சிவப்புப் புள்ளிபோன்ற வீக்கம்முடைய தோற்றம் அல்லது தோலில் தடிப்புகள் தோன்றல், இருமல், தும்மல், கண் சிவப்படைதல்
பொன்னுக்கு வீங்கி (mumps)	மிக்சோ வைரஸ் பரோடிடிஸ்	நோய்த் தொற்றுத் துளிகள், நோய்த் தொற்று கருக்கள், நோய்த் தொற்று ஏற்பட்டிருப்பவருடன் நேரடித் தொடர்பு.	மேல் சுவாசக் குழாய்	கன்னஉமிழ் நீர்ச் சுரப்பி பெரியதாகுதல், தாடையை அசைத்தலில் சிரமம்
சின்னம்மை (Chicken Pox)	வாரிசெல்லா ஸோஸ்டர் வைரஸ்	நோய்த் தொற்றுத் துளிகள், நோய்த் தொற்று கருக்கள், நோய்த் தொற்று ஏற்பட்டிருப்பவருடன் நேரடித் தொடர்பு.	சுவாசக் குழாய்	தோலில் ஏற்படும் வீக்கம் (கொப்பளம்) காய்ச்சல், அசதி

25 வினா எண் 57

காரணம் மற்றும் கூற்று வகை. கூற்று [A]: தில்லியில் மராட்டிய ஆட்சியை நிறுவுவதே சிவாஜியின் நோக்கமாகும். காரணம் [R]: முகலாயர்களுக்கு எதிரான மராத்தியர்களுக்கு சிவாஜி தலைமை தாங்கினார்.

(A) [A] தவறு ஆனால் [R] சரி

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]யின் சரியான விளக்கமாகும்

(C) [A] சரி ஆனால் [R] தவறு

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]யின் சரியான விளக்கமல்ல

Reason and Assertion type: Assertion [A]: Shivaji aimed at establishing Maratha rule in Delhi. Reason [R]: Shivaji took the leadership of the Maratha resistance against the Mughals.

(A) [A] is false but [R] is true

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]


(C) [A] is true but [R] is false

(D) Both [A] and [R] are true, but [R] is not a correct explanation of [A]

பாடநூல் மூலம்

▶ 11TH HISTORY – LESSON 15 – PG NUM: 245

மூல வினாத்தாள்



57. Reason and Assertion type :

Assertion [A] : Shivaji aimed at establishing Maratha rule in Delhi.

Reason [R] : Shivaji took the leadership of the Maratha resistance against the Mughals.

(A) [A] is false but [R] is true

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(C) [A] is true but [R] is false

(D) Both [A] and [R] are true, but [R] is not a correct explanation of [A]

(E) Answer not known

காரணம் மற்றும் கூற்று வகை.

கூற்று [A] : தில்லியில் மராட்டிய ஆட்சியை நிறுவுவதே சிவாஜியின் நோக்கமாகும்.

காரணம் [R] : முகலாயர்களுக்கு எதிரான மராத்தியர்களுக்கு சிவாஜி தலைமை தாங்கினார்.

(A) [A] தவறு ஆனால் [R] சரி

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]யின் சரியான விளக்கமாகும்

(C) [A] சரி ஆனால் [R] தவறு

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]யின் சரியான விளக்கமல்ல.

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



முகலாயரின் வீழ்ச்சியில் மராத்தியர் முக்கியப் பங்கு வகித்தனர். 18ஆம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவின் மையப்பகுதியில் மராத்திய மாமன்னர் சிவாஜியின் தலைமையில் முகலாய ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதில் வெற்றி பெற்றனர். தஞ்சாவூரில் நாயக்க மன்னரின் ஆட்சி முடிவடைந்த உடன் மராத்தியத் தளபதி வெங்கோஜி (சிவாஜியின் ஒன்றுவிட்ட சகோதரர்) தமிழகத்தில் மராத்திய ஆட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டார். தஞ்சாவூரில் 1674ஆம் ஆண்டு தொடங்கிய மராத்தியரின் ஆட்சி 1832ஆம் ஆண்டு இரண்டாவது சரபோஜி மன்னர் மரணம் வரை நீடித்தது.

26 வினா எண் 58

பின்வருவனவற்றை பொருத்துக : (a) கிழக்கிந்திய சங்கம் (b) இந்தியன் லீக் (c) பம்பாய் சங்கம் (d) மெட்ராஸ் (சென்னை) மகாஜனா சபா | 1. சிசிர்குமார் கோஷ் 2. தாதாபாய் நௌரோஜி 3. P. ஆனந்த சார்லு 4. பத்ருத்தீன் தயாப்ஜி

(A) (a) 3, (b) 1, (c) 4, (d) 2
(B) (a) 2, (b) 1, (c) 4, (d) 3
(C) (a) 3, (b) 2, (c) 4, (d) 1
(D) (a) 4, (b) 1, (c) 3, (d) 2

Match the following: (a) The East India Association (b) The Indian League (c) The Bombay Association (d) The Madras Mahajana Sabha | 1. Sisir Kumar Ghosh 2. Dadabhai Naoroji 3. P. Ananda Charlu 4. Badruddin Tyabji

(A) (a) 3, (b) 1, (c) 4, (d) 2
(B) (a) 2, (b) 1, (c) 4, (d) 3
(C) (a) 3, (b) 2, (c) 4, (d) 1
(D) (a) 4, (b) 1, (c) 3, (d) 2

பாடநூல் மூலம்

▶ 12TH HISTORY – UNIT 1 – PG NUM: 9 , 13

மூல வினாத்தாள்

58. Match the following :

(a) The East India Association	1. Sisir Kumar Ghosh
(b) The Indian League	2. Dadabhai Naoroji
(c) The Bombay Association	3. P. Ananda Charlu
(d) The Madras Mahajana Sabha	4. Badruddin Tyabji

	(a)	(b)	(c)	(d)
(A)	3	1	4	2
(B)	2	1	4	3
(C)	3	2	4	1
(D)	4	1	3	2

(E) Answer not known

பின்வருவனவற்றை பொருத்துக :


(a) கிழக்கிந்திய சங்கம்	1. சிசிர்குமார் கோஷ்
(b) இந்தியன் லீக்	2. தாதாபாய் நௌரோஜி
(c) பம்பாய் சங்கம்	3. P. ஆனந்த சார்லு
(d) மெட்ராஸ் (சென்னை) மகாஜனா சபா	4. பத்ருத்தீன் தயாப்ஜி

	(a)	(b)	(c)	(d)
(A)	3	1	4	2
(B)	2	1	4	3
(C)	3	2	4	1
(D)	4	1	3	2

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

1.6 நௌரோஜியும் அவர் முன்வைத்த சுரண்டல் கோட்பாடும்



தாதாபாய் நௌரோஜி

'இந்திய தேசியத்தின் முதுபெரும் மனிதர்' என அறியப்படும் தாதாபாய் நௌரோஜி தொடக்ககால தேசிய இயக்கத்தின் முக்கியத் தலைவர்களில் ஒருவராவார். 1870களில் பம்பாய் மாநகராட்சிக் கழகத்திற்கும், நகரசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1892இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் அவர் லண்டனில் 'இந்திய சங்கம் (Indian Society – 1865), கிழக்கிந்தியக் கழகம் (East Indian Association – 1866) எனும் அமைப்புகளை உருவாக்கினார். அவர் மூன்று முறை இந்திய தேசிய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

(ஆ) சென்னை மகாஜன சங்கம் (Madras Mahajana Sabha – MMS)

சென்னைவாசிகள் சங்கம் செயலிழந்த பின்னர் சென்னை மாகாணத்தில் அதைப் போன்ற வேறு அமைப்பு இல்லாமல் போனது. கற்றறிந்த பல இந்தியர்கள் இந்நிலையைக் கவலையுடன் நோக்கினர். ஓர் அரசியல் சார்ந்த அமைப்பின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவாக மே, 1884இல் சென்னை மகாஜன சங்கம் நிறுவப் பெற்றது. 1884 மே 16இல் நடைபெற்ற தொடக்க விழாவில் பங்கேற்ற முக்கியப் பிரமுகர்கள் G. சுப்ரமணியம், வீரராகவாச்சாரி, அனந்தா சார்லு, ரங்கையா, பாலாஜிராவ், சேலம் ராமசாமி ஆகியோராவர். இதற்கிடையே இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப் பெற்றது. சென்னை மகாஜன சபையின் பிராந்திய மாநாடு நடைபெற்று முடிந்த பின்னர் அதன் தலைவர்கள் பம்பாயில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டில் கலந்துகொண்டு சென்னை மகாஜன சபையை இந்திய தேசிய காங்கிரசோடு இணைத்தனர்.

27 வினா எண் 59

சரியாக பொருந்தாத இணையை கண்டறிக. (1) வைக்கம் சத்தியாக்கிரகம் – 1924 (2) சுயமரியாதை இயக்கம் – 1925 (3) முதல் சுயமரியாதை திருமணச் சட்டம் – 1935 (4) முதலாவது வகுப்புரிமை அரசு ஆணை – 1929

(A) (1) மற்றும் (3)
(B) (3) மற்றும் (4)
(C) (4) மற்றும் (1)
(D) (2) மற்றும் (3)

Which of the following is incorrectly paired? (1) Vaikkom Satyagraha - 1924 (2) Self Respect Movement - 1925 (3) Self Respect Marriage Act - 1935 (4) First Communal Government Order - 1929

(A) (1) and (3)
(B) (3) and (4)
(C) (4) and (1)
(D) (2) and (3)

பாடநூல் மூலம்

▶ 10TH SOCIAL SCIENCE – HISTORY – UNIT 10 – PG NUM: 128

மூல வினாத்தாள்

59. Which of the following is incorrectly paired?

(1)	Vaikkom Satyagraha	–	1924
(2)	Self Respect Movement	–	1925
(3)	Self Respect Marriage Act	–	1935
(4)	First Communal Government Order	–	1929

(A) (1) and (3)
(B) (3) and (4)
(C) (4) and (1)
(D) (2) and (3)
(E) Answer not known

சரியாக பொருந்தாத இணையை கண்டறிக.

(1)	வைக்கம் சத்தியாக்கிரகம்	–	1924
(2)	சுயமரியாதை இயக்கம்	–	1925
(3)	முதல் சுயமரியாதை திருமணச் சட்டம்	–	1935
(4)	முதலாவது வகுப்புரிமை அரசு ஆணை	–	1929

(A) (1) மற்றும் (3)
(B) (3) மற்றும் (4)
(C) (4) மற்றும் (1)
(D) (2) மற்றும் (3)
(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

பல்வேறு சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டங்களை இயற்றும் பணிகளை மேற்கொண்டது. சமூக நீதியை நிலைநாட்டுவதின் ஒரு பகுதியாக பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் (1921 செப்டம்பர் 16 மற்றும் 1922 ஆகஸ்ட் 15) இயற்றப்பட்டன. நிருவாக அதிகாரங்களை அனைத்து சமூகத்தினரும் பங்கிட்டுக் கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய 1924இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது. இம்முறையைப் பின்பற்றி பிரிட்டிஷ் இந்திய அரசு 1929இல் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியது.

28 வினா எண் 60

கூற்று [A]: காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் விளைவாக சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டது. காரணம் [R]: காந்தி இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமாகும்

(C) [A] தவறு, [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமல்ல

Assertion [A]: The Gandhi-Irwin Pact resulted in the suspension of Civil Disobedience Movement. Reason [R]: Gandhi participated in the Second Round Table Conference.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]


(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

பாடநூல் மூலம்

▶ 10TH SOCIAL SCIENCE – HISTORY – UNIT 8 – PG NUM: 102

மூல வினாத்தாள்



60. Assertion [A] : The Gandhi-Irwin Pact resulted in the suspension of Civil Disobedience Movement.

Reason [R] : Gandhi participated in the Second Round Table Conference.

(A) [A] is true but [R] is false

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A]: காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் விளைவாக சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டது.

காரணம் [R] : காந்தி இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் பங்கேற்றார்.

(A) [A] சரி ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மேலும் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமாகும்.

(C) [A] தவறு, [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A]விற்கான சரியான விளக்கமல்ல.

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



(இ) காந்தி–இர்வின் ஒப்பந்தம்

காந்தியடிகளுடன் அரசப்பிரதிநிதி இர்வின் பிரபு பேச்சுவார்த்தைகளை நடத்தியதையடுத்து 1931 மார்ச் 5ஆம் நாள் காந்தி–இர்வின் ஒப்பந்தம் ஏற்பட்டது. வன்முறையில் ஈடுபடாத அனைத்து அரசியல் கைதிகளையும் உடனடியாக விடுதலை செய்வது, கைப்பற்றப்பட்ட நிலத்தைத் திரும்பத் தருவது, பதவி விலகிய அரசு ஊழியர்கள் விஷயத்தில் நீக்குபோக்காக நடந்துகொள்வது ஆகிய கோரிக்கைகளை ஆங்கிலேய அரசு ஏற்றுக்கொண்டது. கடலோர கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் பயன்பாட்டுக்காக உப்புக் காய்ச்சவும் வன்முறை இல்லாமல் ஆர்ப்பாட்டங்கள் செய்யவும் இந்த ஒப்பந்தம் வகைசெய்தது. சட்டமறுப்பு இயக்கத்தை ரத்து செய்துவிட்டு இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள காங்கிரஸ் கட்சி ஒப்புக்கொண்டது. 1931 செப்டம்பர் 7ஆம் நாள் நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார். சிறுபான்மையினருக்குத் தனித்தொகுதிகள் வழங்குவதை காந்தியடிகள் ஏற்கவில்லை. இதன் விளைவாக, இரண்டாவது வட்டமேசை மாநாடு எந்தவித முடிவும் எட்டப்படாமல் முடிவடைந்தது.

29 வினா எண் 61

இந்திய அரசியலமைப்பு குறித்துப் பின்வருவனவற்றினைப் பொருத்துக : பகுதி (a) XI (b) IX (c) XV (d) IV | பொருள் 1. அரசு நெறிமுறைக் கொள்கைகள் 2. தேர்தல்கள் 3. பஞ்சாயத்துகள் 4. ஒன்றிய மாநில அரசுகளுக்கிடையேயான உறவுமுறை

(A) (a) 2, (b) 1, (c) 4, (d) 3
(B) (a) 1, (b) 3, (c) 4, (d) 2
(C) (a) 3, (b) 4, (c) 1, (d) 2
(D) (a) 4, (b) 3, (c) 2, (d) 1

Match the following with regard to Indian Constitution: Part (a) XI (b) IX (c) XV (d) IV | Subject 1. The Directive Principles of State Policy 2. Elections 3. Panchayats 4. Relations between the Union and the States

(A) (a) 2, (b) 1, (c) 4, (d) 3
(B) (a) 1, (b) 3, (c) 4, (d) 2
(C) (a) 3, (b) 4, (c) 1, (d) 2
(D) (a) 4, (b) 3, (c) 2, (d) 1

பாடநூல் மூலம்

- 10TH SOCIAL SCIENCE – CIVICS – UNIT 1 – PG NUM: 257
- 11TH POLITICAL SCIENCE – UNIT 12 – PG NUM: 241
- 11TH POLITICAL SCIENCE – UNIT 11 – PG NUM: 211

மூல வினாத்தாள்

61. Match the following with regard to Indian Constitution :

Part	Subject
(a) XI	1. The Directive Principles of State Policy
(b) IX	2. Elections
(c) XV	3. Panchayats
(d) IV	4. Relations between the Union and the States

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	4	3
(B)	1	3	4	2
(C)	3	4	1	2
(D)	4	3	2	1

(E) Answer not known

இந்திய அரசியலமைப்பு குறித்துப் பின்வருவனவற்றினைப் பொருத்துக :

பகுதி	பொருள்
(a) XI	1. அரசு நெறிமுறைக் கொள்கைகள்
(b) IX	2. தேர்தல்கள்
(c) XV	3. பஞ்சாயத்துகள்
(d) IV	4. ஒன்றிய மாநில அரசுகளுக்கிடையேயான உறவுமுறை

	(a)	(b)	(c)	(d)
(A)	2	1	4	3
(B)	1	3	4	2
(C)	3	4	1	2
(D)	4	3	2	1

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்

அங்கீகரிக்கப்பட வேண்டும்.

1.7 அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்

அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள், இந்திய அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV சட்டப்பிரிவு 36ல் இருந்து 51 வரை தரப்பட்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டம், வழிகாட்டும் நெறிமுறைகளுக்காகத் தனியாக எந்தவொரு வகைபாட்டினையும் கொண்டிருக்கவில்லை. இருப்பினும் பொருளடக்கம் மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் அவை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதாவது சமதர்ம, காந்திய மற்றும் தாராள–அறிவுசார்ந்தவை என்று பிரிக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கைகளை, நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாகச் செயற்படுத்த முடியாது. ஆனால், இவை ஒரு நாட்டினை நிர்வகிக்க அவசியமானவை. சமுதாய நலனை மக்களுக்குத் தருவதே இதன் நோக்கமாகும். இந்திய அரசியலமைப்பின் 'புதுமையான சிறப்பம்சம்' என டாக்டர் B.R. அம்பேத்கர் இதனை விவரிக்கிறார்.

பின்பு, பல்வேறு முயற்சிகளின் விளைவாக 1992–ஆம் ஆண்டு, முந்தைய பல முயற்சிகளின் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கி, அரசாங்கம் 73–வது மற்றும் 74–வது சட்டத்திருத்த மசோதாவை 1992–ல் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி இறுதியில் அது 1993–ஆம் ஆண்டு இரு அவைகளிலும் நிறைவேற்றியது.

இந்த 73–வது சட்ட திருத்தமும் 74–வது சட்ட திருத்தமும் இந்திய அரசமைப்பில் பகுதி IX மற்றும் IX(A) என்ற இரு பகுதிகளை இணைத்தது. அதில் அரசியல் சட்ட பிரிவுகள் 243 முதல் 243(ZG) வரை உள்ளது.

உங்களுக்குத் தெரியுமா? இந்திய அரசமைப்பின் பகுதி 15, உறுப்புகள் 324–329 தேர்தலைப் பற்றியதாகும்.

30 வினா எண் 63

பின்வரும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் குறித்த சரியான கருத்தைத் தெரிவு செய்க.

(A) இது ஒரு முழுமையான நீதித்துறை அமைப்பு

(B) இது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986இன் கீழ் ஏற்படுத்தப்பட்டது

(C) இதன் தலைவராக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் இருப்பார்

(D) இதன் தலைமையகம் அலகாபாத் ஆகும்

Consider the following statements about the National Consumer Disputes Redressal Commission (NCDRC). Find out the correct statements.

(A) It's a complete judicial body

(B) It was established under the Consumer Protection Act, 1986

(C) It's headed by the Union Minister of Consumer Affairs

(D) It's Headquarter is Allahabad

பாடநூல் மூலம்

▶ 12TH COMMERCE – UNIT 6 – CHAPTER 18 – PG NUM: 146–147

மூல வினாத்தாள்

63. Consider the following statements about the National Consumer Disputes Redressal Commission (NCDRC)
Find out the correct statements.

(A) It's a complete judicial body

(B) It was established under the Consumer Protection Act, 1986

(C) It's headed by the Union Minister of Consumer Affairs

(D) It's Headquarter is Allahabad

(E) Answer not known

பின்வரும் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம் குறித்த சரியான கருத்தைத் தெரிவு செய்க.

(A) இது ஒரு முழுமையான நீதித்துறை அமைப்பு


(B) இது நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986இன் கீழ் ஏற்படுத்தப்பட்டது

(C) இதன் தலைவராக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் இருப்பார்

(D) இதன் தலைமையகம் அலகாபாத் ஆகும்

(E) விடை தெரியவில்லை

பாடநூல் பக்கம்



உறுப்பினர்கள் (Members)

1. உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக சம்மந்தப்பட்ட மாநில அரசால் பதவி அமர்த்தப்பட்ட நபர் அந்த ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்படலாம்.
2. நீதி, நேர்மை, நாணயம் கொண்ட மற்றும் போதிய அறிவு மற்றும் அனுபவம் கொண்ட நார்களையோ அல்லது பொருளாதாரம் சட்டம், வணிகம் மற்றும் தொழில் நிர்வாகம்

செய்யலாம்.

1986 தேசிய நுகர்வோர் குறைதீர்ப்பு ஆணையம் அல்லது தேசிய ஆணையம் (National Consumer Disputes Reressel Commission)

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 ன் கீழ் ஒரு பகுதி நீதிமன்றமாக 1988 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இதன் தலைமையகம்

146

ce Tamil Unit 6.indd 146 19/12/2022

புதுடெல்லியில் இயங்கி வருகிறது. இவ் தீர்ப்பாணையம் உச்சநீதிமன்றத்திலிருந்து ஒய்வு பெற்ற நீதிபதியை தலைவராக கொண்டு இயங்கி வருகிறது. இவ் அமைப்பு தேசிய தீர்பாணையம் என்றும் அழைக்கப்பட்டு வருகிறது.

மேல்முறையீட்டு மன்றம் (Appellate Forum)

நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 1986 பிரிவு 23ன் கீழ் தேசிய தீர்பாணையம் கொடுத்த தீப்பிணை எதிர்த்து பாதிக்கப்பட்ட நபர் தீர்ப்பை பெற்ற 30 நாட்களுக்குள் நீதிமன்றத்தில் முறையீடு செய்யலாம்.

31 வினா எண் 69

சட்டப்பிரிவுகளை அதன் விதியுடன் சரியாக பொருத்தவும். (a) பிரிவு 330 (b) பிரிவு 331 (c) பிரிவு 332 (d) பிரிவு 333 | 1. மாநிலங்களின் சட்டமன்றத்தில் SC மற்றும் ST இட ஒதுக்கீடு 2. மக்களவையில் SC மற்றும் ST இட ஒதுக்கீடு 3. மாநிலங்களின் சட்டமன்றத்தில் ஆங்கிலேய இந்திய சமூகத்திற்கான பிரதிநிதித்துவம் 4. மக்களவையில் ஆங்கிலேய இந்திய சமூகத்திற்கான பிரதிநிதித்துவம்

(A) (a) 3, (b) 1, (c) 2, (d) 4
(B) (a) 2, (b) 3, (c) 4, (d) 1
(C) (a) 2, (b) 4, (c) 1, (d) 3
(D) (a) 4, (b) 3, (c) 2, (d) 1

Match correctly the Article with its Provision. (a) Article 330 (b) Article 331 (c) Article 332 (d) Article 333 | 1. Reservation of seats for SC and ST in the Legislative Assembly of States. 2. Reservation for SC and ST in the House of People. 3. Representation of the Anglo-Indian Community in the Legislative Assembly of the State 4. Representation of the Anglo-Indian Community in the House of People.

(A) (a) 3, (b) 1, (c) 2, (d) 4
(B) (a) 2, (b) 3, (c) 4, (d) 1
(C) (a) 2, (b) 4, (c) 1, (d) 3
(D) (a) 4, (b) 3, (c) 2, (d) 1

பாடநூல் மூலம்

▶ 12TH POLITICAL SCIENCE – UNIT 1 – PG NUM: 12

மூல வினாத்தாள்

69. Match correctly the Article with its Provision.

(a) Article 330	1. Reservation of seats for SC and ST in the Legislative Assembly of States.
(b) Article 331	2. Reservation for SC and ST in the House of People.
(c) Article 332	3. Representation of the Anglo-Indian Community in the Legislative Assembly of the State
(d) Article 333	4. Representation of the Anglo-Indian Community in the House of People.

	(a)	(b)	(c)	(d)
(A)	3	1	2	4
(B)	2	3	4	1
(C)	2	4	1	3
(D)	4	3	2	1

(E) Answer not known

சட்டப்பிரிவுகளை அதன் விதியுடன் சரியாக பொருத்தவும்.

(a) பிரிவு 330	1. மாநிலங்களின் சட்டமன்றத்தில் SC மற்றும் ST இட ஒதுக்கீடு
(b) பிரிவு 331	2. மக்களவையில் SC மற்றும் ST இட ஒதுக்கீடு
(c) பிரிவு 332	3. மாநிலங்களின் சட்டமன்றத்தில் ஆங்கிலேய இந்திய சமூகத்திற்கான பிரதிநிதித்துவம்
(d) பிரிவு 333	4. மக்களவையில் ஆங்கிலேய இந்திய சமூகத்திற்கான பிரதிநிதித்துவம்

	(a)	(b)	(c)	(d)
(A)	3	1	2	4
(B)	2	3	4	1
(C)	2	4	1	3
(D)	4	3	2	1

(E) விடை தெரியவில்லை

67 ω

பாடநூல் பக்கம்



தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம்

- தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றம் 234 உறுப்பினர்களைக் கொண்டது. 189 உறுப்பினர்கள் பொது தொகுதிகளிலிருந்தும் 45 உறுப்பினர்கள் தனித்தொகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- சட்டமன்றத்தில் முதல் கூட்டத் தொடர் முதல் பொதுத் தேர்தலைத் தொடர்ந்து (1952). 3.5.1952 அன்று தொடங்கியது.
- அரசமைப்பு உறுப்பு 333இன் கீழ் ஆங்கிலோ- இந்திய பிரதிநிதி ஒருவர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்.
- 06.04.2021 அன்று தமிழக சட்டமன்றத்திற்கு பொதுத் தேர்தல் நடந்ததையொட்டி 16-வது தமிழக சட்டமன்றம் 07.05.2021 அன்று அமைக்கப்பட்டது.

32 வினா எண் 74

